1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) சந்திரசேகர புரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் 1977–78 ஆம் ஆண்டிற்கான தணிக்கை இன்னும் முடிவு பெறவில்லை.

(ஆ) இப்பண்டகசாலையின் 31–12–77 தேதி வரைக்கான கணக்குகளை தணிக்கை செய்தபோது காணப்பட்ட குறைகளுக்கான ஓர் தனி அறிக்கை, கும்பகோணம் மாவட்ட கூட்டுறவு தணிக்கை அதிகாரியிடமிருந்து 17–3–79-ந் தேதியன்று பதிவாளருக்கு வரப்பெற்றுள்ளது.

(இ) இத்தனி அறிக்கையின் மீது தக்க நடவடிக்கை எடுக்கச் சொல்லி தஞ்சை மண்டல இணைப்பதிவாளர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தை சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலையில் தொழிலாளர்களை முறையாக நிர்வாகம் நடத்துவது இல்லை என்று கூறப்படுகிறது. அதுபற்றி ஏதாவது புகார் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களின் பிரச்னைகள் பற்றிய சில விவரங்கள் மனுக்கள், முறையீடுகள் வந்திருக்கின்றன. அதனை அரசு பரிசிலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளை செய்துக் கொண்டிருக்கிறது.

## நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம்.

*வினா எண். 826 : திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1978-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டப்படி இதுவரை சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி ஆகிய நகரங்களில் உபரியாக எடுக்கப்பட்ட நிலம் எத்தனை சதுர மீட்டர்?

(ஆ) உபரி நிலத்தை கிரயத்திற்கு விற்கும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) (ஆ) & (இ) உபரி நிலம் இதுவரை கையகப்படுத்தவில்லை.

திரு. செ. சிவசாமி : நகர்ப்புற நில உச்சவரம்பிலே புதிதாக சட்டம் ஒன்று வந்ததிலே ஒரு சதுர அடி நிலம்கூட உபரியாக எடுக்கப்படவில்லை என்று கேள்விப்படுகிறேன். ஏன் அந்த அளவுக்கு சட்டத்தைத் திருத்தி அதிகமான நிலங்கள் கொடுக்கக் கூடிய அளவு அந்தச் சட்டத்தை திருத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். இதுவரையிலும் எடுக்கப்படவில்லை என்றால் அரசு கையகப்படுத்துகிற வரைக்கும் எடுத்ததாக அர்த்தம் இல்லை. ஆனால், இன்றைக்கு வந்திருக்கிற கணக்குப்படி 53,619 சதுர மீட்டர் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கெல்லாம் கணக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அங்குள்ள நிலத்தின் மதிப்பீடு தொகை மாற்றப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அப்படி மாற்றப்பட்டிருக்குமேயானால் அது நிலத்தின் பரப்பளவின் மீது மாற்றப்பட்டிருக்கிறதா அல்லது அந்த நிலத்தின் மதிப்பின் மீது தொகை மாற்றப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டம் என்று சொன்னார்கள். எனக்கு அது விளங்கவில்லை. இருந்தாலும் அவைகளை கொடுப்பது ஊருக்கு ஊர் என்று தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணத்திற்கு சென்னை ஒரு வகையிலும், கோவை, திருச்சி, மதுரை ஒரு வகையிலும், திருநெல்வேலி ஒரு வகையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த ஊருக்கு ஏற்றவாறு அதனுடைய நிலம் மதிப்பீடு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் மாற்றப்படுவது மிகப் பெரிய அளவுக்கு நகர்ப்புறத்தில் நிலங்கள் மிகப் பெரிய செல்வமாக சொத்தாக கருதப்படுகிறது. 1978-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட நில உச்சவரம்பு சட்டத்தின் அடிப்படையில் கையகப்படுத்தப்படக்கூடிய நிலம் மிகக் குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் சொன்னார்கள். அந்தச் சட்டத்தைத் திருத்தி, இன்றைக்கு நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் மிகப் பெரிய

1979 ஏப்ரல் 26]

செல்வந்தர்கள் கையில்தான் இருக்கிறது, அவைகளை அதிகமாக எடுத்துக் கொள்ள அரசு முயற்சி செய்யுமா? ஏனென்றால், நாட்டு மக்களுடைய, கோடானுகோடி ஏழை மக்களினுடைய உழைப்பால்தான் அந்த நிலங்களின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. அந்த உயர்ந்த மதிப்பை கொடுப்பதற்காக, ஏற்கெனவே இருந்து வந்த நிலங்களை கையகப்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரத்திலுள்ள நிலத்தினுடைய மதிப்பு உயர்வு பெறுவது எப்படியென்றால், பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரியைக் கொண்டு தண்ணீர் வசதி, ரோடு வசதி, விளக்கு வசதி போன்றவைகளை வைத்து கொண்டுதான் அங்குள்ள நிலத்தின் மதிப்பீடு போடப்படுகிறது. நிலங்கள் எங்கிருக்கிறதோ அந்த இடத்தின் முன்னேற்றத்தைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மௌண்ட் ரோடு—அண்ணா சாலையை எடுத்துக்கொண்டால், அங்குள்ள இடத்தின்படி அந்த நிலங்களின் விலை ஒரு கிரவுண்டினுடைய விலை 1 லட்சம், $1\frac{1}{2}$ லட்சம் என்று இருக்கிறது. ஆனால், சென்னை நகரைப்பொருத்தவரை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்றால் ஒரு கிரவுண்டினுடைய விலை குறைந்தது 500-லிருந்து உயர்ந்த பட்சம் மிக முக்கியமாக இருந்தால் 11,500 தான் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கோவை, மதுரை, திருச்சி போன்ற இடங்களில் இன்னும் குறைவாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆயக்குடியில் உள்ள புறம்போக்கு நிலம்

*வினா எண் 827 — திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனி வட்டம், 96, மேற்கு ஆயக்குடி சர்வே எண் 15-ல் ஒரு ஏக்கர் 8 சென்ட் (1.8 ஏக்கர்) அரசு புறம்போக்கு நிலம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்நிலத்தையும், அதிலுள்ள கட்டிடத்தையும் ஆயக்குடி பேரூராட்சிக்கு சொந்தமாக்கக் கோரி 1974-75-ல் மேற்படி பேரூராட்சியிலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், பழன வட்டம், மேற்கு ஆயக்குடி கிராமத்தில் வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலத்தின் சர்வே எண் தற்போது 174/13. இதன் பரப்பளவு 1.08 ஏக்கர். மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதுபற்றி அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.